தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 19

2012 பிப்ரவரி 2, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்."

சொற்களின் வகை, தொகைகளை அறிந்த நல்லவர்கள் அவையில் நிறைந்திருப்பவர்களின் தன்மை அறிந்து அதற்கேற்ப பேச வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

நல்ல குறளா? எல்லோரும் ஆமோதித்துவிட்டீர்கள்!

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

துணை மின் நிலையம்

***5314—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவக்கப்பட்டு முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பல கோடி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட தரமணி பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியினுடைய தேவைகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படின், அதுகுறித்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆவன செய்யும்.*

2012 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்களில் பழுதடையும் மின் மாற்றிகளைப் புதிதாக மாற்றியமைக்க, போதுமான எண்ணிக்கையில் அந்தந்த கோட்டப் பொறியாளர்களின் எல்லைகளிலேயே கையிருப்பில் வைத்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த துணை மின் நிலையங்களிலே பழுதடைந்த மின் மாற்றிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாகச் சரி செய்வதற்குரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் இப்பொழுது எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

கூட்டுக் குடிநீர்

***1261—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை பகுதியில் வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*